1974 சனவரி 23]

Montessori Nursery Schools.

* 41. *Q*--THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there are proposals under consideration to start Montessori Nursery Schools by the Government;

(*b*) if so, whether any representation has been received in this regard; and

(*c*) the decision taken thereon?

மாண்டிசோரி நர்சரி பள்ளிகள்

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாண்டிசோரி நர்சரி பள்ளிகளைத் தொடங்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், இது குறித்து முறையீடு ஏதும் வரப்பெற்றுள்ளதா ?

(உ) இது குறித்து எடுக்கப்பட்ட முடிவு யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இல்லை.

(உ) கேள்விக்கிடமில்லை.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, இந்த மாண்டிசோரி நர்சரி பள்ளிகளில் படிக்க வேண்டிய நிலையில் நம் நாட்டில் பல லட்சக்கணக்கான குழந்தைகள் இருக்கிறார்கள். அப்போதுதான் அவர்களுடைய அறிவு வளரும், சீராக இருக்குமென்று சொல்லி நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கூட இதை வளர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதைப் பெருமளவில் ஆரம்பிப்பதற்கான திட்டத்தை இந்த 5-வது திட்ட காலத்திலாவது அரசு உருவாக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, துவக்கப் பள்ளிகள், மற்ற பள்ளிகளை நடத்துவதற்கு பொறுப்பேற்றுக்கொள்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன. நாமே துவக்கப் பள்ளிகளை இன்னும் பல ஊர்களில் ஆரம்பிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நிலையில் மாண்டிசோரி பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவது இப்போதிருக்கிற சூழ்நிலையில்

ஆகாத ஒன்றாக இருக்கிறது. ஆனால் ஆங்காங்கு தனியார்கள் இந்த மாண்டி சோரி பள்ளிகளை ஏற்படுத்த, அந்தந்த இடத்திற்குத் தேவையானபடி அவை களை நடத்துவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனால் அரசு மற்றவை களிலே கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. அரசு இன்னும் பல இடங் களில் துவக்கப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆகவே, மாண்டிசோரி பள்ளிகளை ஏற்படுத்துகின்ற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இந்த மாண்டிசோரி பள்ளிகளை தனியார்கள் நடத்துவதால், அந்தப் பள்ளிகளுக்கு அரசாங்க அங்கீ காரம் இல்லாததால், வேறு பள்ளிகளில் சேர்ப்பதில் சிரமம் இருக்கிறது. ஆகவே, தனியார் பள்ளிகளுக்கு அங்கிகாரம் கொடுக்க அரசுக் குறிப்பு உண்டா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்டி சோரி பள்ளி பெரும்பாலும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குத்தான். 5 வயதுக்கு மேல் சேர்க்கும்போது எந்தப் பள்ளியிலும் சேர்க்கலாம். அதற்கு முன்னால் சேர்ப்பதில்லை. எந்தக் கஷ்டமும் இருக்காது. ஆகவே இதற்கு அங்கீகாரமே தேவையில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, பெரிய நகரங்களில் நர்சரி பள்ளிகள் ஒரு பெரிய தொழிலாகவும், வியாபாரத் தொழில் மாதிரியும் நடப் பதனால், இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சில விதி முறைகளை ஏற் படுத்தி, இன்னின்ன கட்டணம் தான் விதிக்க வேண்டும், இன்னின்ன சுகாதார வசதிகள் இருக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது இயலுமாவென்று தெரியவில்லை. வேண்டுமானால் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யலாம். சட்டத் துறை இணக்கம் தெரிவிக்குமானால், இதுபற்றி யோசிக்க லாம்.